# பரம தளத்தில் வாழும் வாழ்க்கை

Transcribed from a message spoken in November 2013 in Chennai

By *R.S.Milton*

## பரம குடியிருப்பு

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" (பிலி. 3:20). தேவனுடைய மக்க ளுடைய குடியிருப்பு அல்லது குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது. குடியிருப்பு அல்லது குடி யுரிமை என்றால் நாம் உண்மையாகவே இந்தப் பூமிக்குரியவர்கள் அல்ல, நாம் பரத்திற்குரியவர்கள் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, "நான் உலகத் தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல," என்று சொன்னார். நான் அதை என் முழு இரு தயத்தோடு விசுவாசிக்கிறேன். தேவனுடைய மக்கள் இந்தப் பூமியிலே வாழ்ந்தபோதுங்கூட, நாம் இந்தப் பூமிக்குரியவர்கள் அல்ல. இது எல்லாக் காலத்திலும் பொருந்தும், எல்லா தேசத்திலும் பொருந்தும். முதலாம் நூற்றாண்டிலே வாழ்ந்த தேவனுடைய மக்களுக்கும் இது பொருந்தும். அவர்கள் ஒருவேளை ரோமப் பேரரசில் வாழ்ந்திருப்பார்கள். ஆனால், அவர்களுடைய கூற்றும் அதுதான். நாம் இந்த உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. நாம் இருபதாம் நூற்றான்டிலே இந்த நாட் டிலே வாழலாம் அல்லது இதை விட ஒரு ஏழையான நாட்டில் வாழலாம் அல்லது இதை விட செல்வம் படைத்த நாட்டில் வாழலாம். ஆனாலும், நாம் இந்தப் பூமிக்குரியவர்கள் அல்ல; நாம் பரத்திற்குரியவர்கள். நம் குடியிருப்பு, நம் குடியுரிமை பரத்திலிருக்கிறது.

*நாம் இந்தப் பூமியிலே இருந்தபோதும் நம் வாழ்க்கை பரம தளத்தில் வாழ்கிற வாழ்க்கை.* இதைத்தான் நான் இன்று சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை பரம தளத்தில் வாழ்கிற வாழ்க்கை. ஒருவேளை பரம தளம் என்பது உங்களுக்குச் சற்று விந்தையாக இருக்கலாம். Heavenly realm என்பதை நான் அப்படி மொழிபெயர்த்துக்கொள்கிறேன். இவைகளெல்லாம் மிக நேர்த்தியாக, மிகச் சிறந்த, மொழிபெயர்ப்பு என்று சொல்ல முடியாது. அது சரியான மொழிபெயர்ப்போ இல்லையோ! என்னைப் பொறுத்தவரை அதுதான் மொழி பெயர்ப்பு.

## பரம வழிகள்

பூமிக்குரிய தளம் என்று ஒன்று இருக்கிறது; பரம தளம் என்று ஒன்று இருக்கிறது நாம் இந்தப் பூமிக்குரிய தளத்தில்தான் இருக்கிறோம். ஆனால், நம் வாழ்க்கை பூமிக்குரிய தளத்தின்படியான தல்ல; அது பரம தளத்தின்படியானது. 2 கொரிந்தியர் 10ஆம் அதிகாரத்தில் பவுல், "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்திற்குரியவைகள் அல்ல," என்று சொல்லுகிறார் (வ. 3). நாம் மாம்சத்தில் வாழ்கிறோம்; ஆனால், நம் கருவிகளும், ஆயுதங்களும், வழிகளும், உபாயங்களும், மாம்சத்திற் குரியதல்ல. நாம் இந்தப் பூமியிலே வாழ்கிறோம்; ஆனால், நம் கருவிகளும், உபாயங்களும், வழி களும், முறைகளும், அமைப்புகளும், திட்டங்களும் இந்தப் பூமிக்குரியது இல்லை. இயேசுகிறிஸ் துவை விசுவாசிக்காத மக்களுக்கு இது மிகவும் விந்தையாக தோன்றும், விநோதமாகத் தோன்றும். முதலாவது, அவர்கள் நம்மை ஆச்சரியத்தோடே பார்ப்பார்கள்; பிறகு அற்பமாகப் பார்ப்பார்கள்; பிறகு, உங்களைப் பயமுறுத்துவார்கள் அல்லது கேலியாகப் பார்ப்பார்கள். ஆனால், தேவனுடைய பிள்ளைகளைப் பொறுத்தவரை ஆச்சரியப்படுவதற்கு அல்லது பிரமிப்பதற்கு ஒன்றுமில்லை. நாம் இந்தப் பூமியிலே வாழ்ந்தபோதும் நம் ஆயுதங்களும், நம் உபாயங்களும், நம் வழிகளும், நம் முறைகளும், நம் அமைப்புகளும், நம் வளங்களும் இந்தப் பூமிக்குரியவைகள் அல்ல; அவைகள் பரத்திற்குரியவைகள்.

இது ஏதோ புதிய ஏற்பாட்டில் மட்டும் உள்ள செய்தி அல்ல. முழு வேதாகமத்திலும் இந்த செய்தி இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் முதல் மனிதனாகிய ஆதாம் சந்தித்த சோதனையே அது தான். அவன் இந்தப் பூமியிலே ஒரு படைக்கபட்ட உயிரியாக இருந்தபோதும்கூட பூமிக்குரிய வளங் களால் வாழ்வதா அல்லது பரம வளங்களால் வாழ்வதா என்பதுதான் அவனுக்கு முன்பாக வைக்கப் பட்ட சோதனை. முதல் மனிதனாகிய ஆதாமுக்கு முன்பாக இருந்த சோதனையே அதுதான். நன்மை தீமை அறியத்தக்க மரத்திலே சாப்பிடுவது என்றால் என்ன பொருள்? தேவன் மனிதனை இந்தப் பூமியின் தளத்திலே வைத்தபோதும்கூட அவன் வாழ்வதற்குப் பரம தளத்திலே வழிகளை

யும், வளங்களையும் வைத்திருக்கிறார். அவைகளால் வாழ முடியும் என்பதுதான் ஆதாமுக்கு வைக்கப்பட்ட சோதனை. ஏறக்குறை நான் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்து விட்டேன். இனிமேல் சொல்வதெல்லாம் விளக்கம்தான்.

*தேவனுடைய மக்கள் பரம தளத்தில் வாழ வேண்டும்.* அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைக்காக அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிக்கூடச் சொல்லலாம்: நாம் இந்தப் பூமியிலே நமக்கு கொடுக்கப் பட்ட வாழ்க்கையிலே அல்லது வாழ்நாளிலே எவ்வளவு காரியங்களை இந்தப் பூமிக்குரிய தளத்தி லிருந்து பரம தளத்திற்குக் கடத்தமுடியுமோ, அவ்வளவு காரியங்களை இந்தப் பூமியின் தளத்தி லிருந்து பரம தளத்திற்கு கடத்துகிற கடத்தற்காரர்களாக நாம் இருக்க வேண்டும். நான் *God's smuggler* என்று ஒரு titleகூட பார்த்திருக்கிறேன். ஒருவர் கம்யூனிஸ நாடுகளுக்கு எப்படிப் வேதாக மத்தைக் கடத்தினார் என்ற தம் அனுபவத்திலிருந்து இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். மிகவும் பரவசமான புத்தகம். அந்தப் புத்தகத்தின் தலைப்பு "God's smuggler". நான் விடுதலையுள்ள நாடு களிலிருந்து கம்யூனிஸ நாடுகளுக்குப் பைபிளைக் கடத்துகிறவன் அல்ல. அந்த அளவுக்கு எனக்குத் தைரியமும், விசுவாசமும் இல்லை.

## தேவனுடைய திட்டம்

ஆனால், என் வாழ்நாளிலே தேவன் எனக்குக் கொடுத்த வாழ்க்கையின் காலத்திலே எவ்வளவு காரி யங்களை, இந்தப் பூமிக்குரிய வாழ்க்கையின் எவ்வளவு காரியங்களைப் பூமிக்குரிய தளத்தி லிருந்து பரம தளத்திற்குக் கொண்டுபோக முடியுமோ, கடத்த முடியுமோ, அவ்வளவு காரியங்களைப் பூமிக்குரிய தளத்திலிருந்து பரம தளத்திற்குக் கடத்த விரும்புகிறேன். பூமியின் வாழ்க்கையை பூமிக் குரிய தளத்திலேயே வாழ்ந்துவிடுவோமென்றால் இந்த வாழ்க்கையின் முடிவுக்கு நாம் வரும்போது அந்தப் பரம தளத்திலே நமக்கு நமக்கும் ஒன்றும் இருக்காது. தேவனுக்கும் ஒன்றும் இருக்காது. மல்கியா 3ஆம் அதிகாரத்தில், "என் சம்பத்தை நான் சேர்க்கும் அந்நாளிலே அவர்கள் என்னுடை யவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்...அப்பொழுது நீங்கள் நீதிமானுக் கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக் கும் இருக்கிற வித்தியாசத்தை திரும்பவும் காண்பீர்கள்" (மல். 3:17, 18). இது ரொம்ப முக்கியமான வசனம்; ரொம்ப அற்புதமான வசனம். தேவன் நம்மைப் பார்த்து அல்லது தேவனுடைய மக்களைப் பார்த்து, தேவனுடைய மக்களுடைய வாழ்க்கையைப் பார்த்து, ஒருநாளிலே அவர் இந்த முழு பிரபஞ்சத்திலும் தமக்கு அருமையானது என்று ஒன்றை அவர் கூட்டிச் சேர்ப்பார். எபேசியர் 1 ஆம் அதிகாரம் (9 ஆம் வசனம்) இப்படிச் சொல்லுகிறது: ஒரு நாளிலே தேவன் இந்தப் பூமியிலும், வானத்திலும், இந்த முழு பிரபஞ்சத்திலும் தமக்கு அருமையானது, தமக்கு இன்பமானது, தமக்குப் பொருள் மிகுந்தது என்று ஒன்றைக் கூட்டிச்சேர்ப்பார். அந்த எபேசியர் 1:9ஆம் வசனம் சொல்லு கிறது: "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலுள்ளவை களும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டிச்சேர்க்கப்படவேண்டும்" என்பது தேவனுடைய திட்டம் என்று எழுதியிருக்கிறது. தேவனுக்கு அருமையானது என்னவென்றால் எந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை இந்தப் பூமிக்குரிய தளத்தில் வாழாமல் பரம தளத்தில் வாழ்கிறார் களோ அந்த அளவுக்கு அந்த வாழ்க்கையிலே கிறிஸ்து நிறைந்திருக்கிறார்; அது தேவனுக்கு மிகவும் அருமையானது; அது தேவனுக்கு மிகவும் இன்பத்தைத் தரக்கூடியது; தேவனுக்கு அது மிகவும் பொருள் மிகுந்தது; நித்தியத்தில் மதிப்புமிக்கது அது.

## வாழ்க்கையின் பொருள்

எனவே, இந்தப் பூமியிலே நம் வாழ்க்கைக்கு ஒரு பொருளைத் தேட நான் விரும்புகிறேன். நம் வாழ்க்கையிலே பலவிதமான பாடுகளும், துன்பங்களும், நெருக்கங்களும், வருத்தங்களும், தேவை களும் நேரிடுகின்றன. யூதனுக்கு ஒரு தேவை; கிரேக்கனுக்கு ஒரு தேவை; ஆணுக்கு ஒரு தேவை; பெண்ணுக்கு ஒரு தேவை; அடிமைக்கு ஒரு தேவை; சுயாதீனனுக்கு ஒரு தேவை. வேதாகமத்தில் வசனம் அப்படி இல்லை. ஆனால், கொலோசெயர் 3:10யைவைத்து நான் அந்த வாக்கியங்களை அடுக்கிக்கொண்டுபோகிறேன். நம் தேவைகள் பல்வேறு விதமாக இருக்கலாம். ஆனால், நம் வாழ்க்கையில் நேரிடுகிற எல்லா நிகழ்ச்சிகள், சம்பவங்கள், பாடுகள், துன்பங்கள், வருத்தங்கள், நெருக்கங்கள், வேதனைகள் எல்லாவற்றுக்குப்பின்பு தேவன் ஒன்றேவொன்றைச் செய்ய விரும்பு கிறார். இவர்கள் பூமிக்குரிய தளத்தில் வாழாமல் பரம தளத்திலே வாழ வேண்டும் என்பது தேவ னுடைய விருப்பம். தேவன் இதை ஏதோவொரு கட்டளையாகத் தரவில்லை. "ஐயோ! நான் பரம *தளத்தில் வாழ வேண்டுமா? இது எவ்வளவு கடினமானது,*" என்று நாம் நினைக்க வேண்டாம். பரம

தளத்தில் வாழ்வது என்பது மிகவும் ஒரு பெரிய விடுதலை. தீர்வின்றி எல்லா திசைகளிலும் நோக்கி பார்க்கிற ஒருவனுக்கு அவன் எதிர்பாராத திசையிலிருந்து ஒரு தீர்வு அல்லது ஒரு பதில் அல்லது ஒரு விடுதலை வந்தால் அதை எவ்வளவு மகிழ்ச்சியோடு அவன் அதை பெற்றுக்கொள்வானோ அல்லது பற்றிக்கொள்வானோ, அந்த அளவுக்குப் பரம தளத்தில் வாழ்வதை நாம் நோக்க வேண் டும். எனவே, தேவன் நம்மைப் பரம தளத்தில் வாழ்வதற்கு அழைத்திருக்கிறார் என்றவுடனே அதை ஒரு சுமையாக நாம் நினைத்துவிடக் கூடாது. ஆனால், இந்தப் பூமி, இந்த உலகம், "நீ பூமியின் தளத்தில் வாழ்வது மிகவும் சுகமானது. பரம தளத்தில் வாழ்வது மிகவும் கடினமானது," என்று நம்மை எண்ணச் செய்யும், நம்மை நம்பச் செய்யும், அது நம்மை அணுகும்.

## பரம தளத்தில் வாழ்வதின் பொருள்

பரம் தளத்தில் வாழ்வது என்றால் என்ன பொருள்? நான் அடிக்கடி கிறிஸ்தவ வாழ்க்கையின் சாராம் சம் என்னவென்று நினைத்துப் பார்ப்பதுண்டு. "உண்மையிலேயே நம் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்? அவருடைய மக்களுடைய வாழ்க்கையிலிருந்து அவர் எதைப் பெற வேண்டும் என்று விரும்புகிறார்," என்று நான் அடிக்கடி சிந்தித்துப் பார்ப்பதுண்டு. அப் படி நான் சிந்தித்து பார்க்கும்போது மீண்டும் மீண்டும் நான் புரிந்துகொள்வது என்னவென்றால் *"தேவனுடைய மக்கள் கிறிஸ்துவில் வாழ வேண்டும்; கிறிஸ்துவோடு வாழ வேண்டும்; கிறிஸ்துவால் வாழ வேண்டும் அல்லது கிறிஸ்துவைக்கொண்டு வாழ வேண்டும்"* என்பதுதான் தேவன் தம்முடைய மக்களுக்காக நியமித்திருக்கிற, வகுத்திருக்கிற, அமைத்திருக்கிற ஒரு வாழ்க்கை. இதை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். சிலர் மிகவும் கவிதைநயத்திற்காக "கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்து கூட்டல் அவன்" என்று சொல்வதுண்டு. இதெல்லாம் கவிதை நயத்திற்கு நல்லது.

## கிறிஸ்தவ வாழ்க்கையின் பொருள்

ஆனால், உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவருடைய மனம் என்னவென்று நாம் சிந்திக்க வேண் டும். "கிறிஸ்து அவன், அவன் கிறிஸ்து" என்பதுபோன்ற ஆடம்பரமான, பகட்டான சொற்களைப் பயன்படுத்துவதற்கு நான் அஞ்சுகிறேன். "கிறிஸ்துவை வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது மனிதனைத் தேவனாக்க தேவன் மனிதனானார்," என்று சொல்வதைக் கேட்கும்போதே அதிர்ச்சியாக இருக்கும். "மனிதனைத் தேவனாக்க, ஜீவனிலும் சுபாவத்திலும் மனிதனைத் தேவனாக்க தேவன் மனிதனானார்," என்று கவிதைநயத்துக்காகச் சொல்லலாம். ரோமன் கத்தோலிக்க சபையில் "மனி தரைப் புனிதராக்க புனிதராம் கடவுள் மனிதரானார்" என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இது அதைவிட ரொம்ப அழகாக இருக்கிறது. "கிறிஸ்து+அவன்; கிறிஸ்துவை வாழ்வது," என்று சொல்வ தெல்லாம் அதிர்ச்சி தரக்கூடிய மதிப்புள்ளவைகள்.

ஆனால் வேதம் ஒன்றைப்பற்றித் தெளிவாய்ச் சொல்லுகிறது. வெறுமனே இயேசுகிறிஸ்து போதித்த போதனையின்படி வாழ்வது கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. "புத்தர் போதித்தார், அதன்படி வாழலாம் அல்லது கன்ஃபூசியஸ் போதித்தார், அதன்படி வாழலாம். சாக்ரடீஸ் போதித்தார், அதன்படி வாழ லாம் அல்லது ஹால்மார்க் போதித்தார், அதன்படி வாழலாம். அதுபோல இயேசுகிறிஸ்துவும் போதித்தார், அதன்படியும் வாழலாம்" என்பது கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. வெறுமனே போதனை களை வைத்து வாழ்வது கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. ஆண்டவராகிய இயேசு நமக்கு வெறுமனே ஒரு போதனை அமைப்புமுறையைத் தந்து, "இந்த போதனை அமைப்புமுறையின்படி வாழுங்கள்," என்று சொல்லவில்லை அல்லது ஒரு மத அமைப்புமுறையைத் தந்து, "இந்த மத அமைப்புமுறை யின்படி வாழுங்கள்," என்று சொல்லவில்லை.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒருவன் கிறிஸ்துவில் இருக்கிறான் என்று வேதம் திட்டவட்ட மாகச் சொல்லுகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது நாம் கிறிஸ்துவில் இருக்கிறோம். **கிறிஸ்துவில்** என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டிலே மிக அருமையான சொற்றொடர். நாம் பழைய படைப்பில் இல்லை; நாம் ஒரு புதிய படைப்பில் இருக்கிறோம்; நாம் கிறிஸ்துவில் இருக்கிறோம். 2 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் "கிறிஸ்துவில் உள்ள ஒரு மனிதனை நான் அறிவேன்," என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். 1 கொரிந்தியர் 1ஆம் அதிகாரம் 30ஆம் வசனம்: நீங்கள் தேவனாலே கிறிஸ்துவில் உள்ளீர்கள். (இது என்னுடைய மொழிபெயர்ப்பு). நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டிருக்கிறீர்கள் என்பது கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. நீங்கள் தேவனாலே கிறிஸ்துவில் இருக்கிறீர்கள். கொலோசெயர் 2ஆம் அதிகாரத்திலே இந்த வசனம் இருக்கிறது.

### இருளின் தளத்திலிருந்து ஒளியின் தளத்துக்கு இடமாற்றம்

முதலாவது நான் சொல்வது கொலோசெயர் *1* ஆம் அதிகாரம் *13, 14*ஆம் வசனங்கள். "இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத் தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்". நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது தேவன் நம்மை என்ன செய்கிறாரென்றால் அவர் நம்மை ஒரு இடமாற்றம் செய்திருக்கிறார். நாம் முன்பு இருளின் ஆட்சியில் இருந்தோம். அவர் நம்மை இடமாற்றம் செய்து இப்போது அவர் நம்மை அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்குள் நம்மைக் கொண்டுவந்திருக்கிறார் என்று சொல்லுகிறது. இருளின் அதிகாரம், இருளின் தளம் என்றுகூடச் சொல்லலாம். என்னைப் பொறுத்த வரை இவைகளெல்லாம் மாபெரும் உண்மை, கூற்றுகள்.

மனிதன் எவ்வளவு ஆராய்ச்சிசெய்தாலும் கண்டுபிடிக்க முடியாத கூற்றுகள். தேவன் மட்டுமே சொன் னாலன்றி நாம் கண்டுபிடிப்பதற்கு வேறு வழியே இல்லை. ஒருவேளை இரண்டாயிரம் வருடங்க ளல்ல, இன்னும் இருபதாயிரம் வருடங்கள் மனுக்குலத்திற்கு கொடுத்தாலும் அவர்கள் ஆராய்ச்சி செய்து பல அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், இதை அவர்கள் கண்டுபிடிக்க முடியாது.

இயேசுவை விசுவாசிக்கும்போது தேவன் நம்மை இருளின் தளத்திலிருந்து இடமாற்றம் செய்து அவ ருடைய அன்பின் குமாரனுடைய தளத்திற்குள் கொண்டுவந்திருக்கிறார். நாம் இப்பொழுது இருளின் தளத்தில் இல்லவே இல்லை. உடனே நாம் நேற்று செய்தது, அதற்கு முந்தின நாள் செய்தது, போன வாரம் செய்தது, போன மாதம் செய்தது ஆகிய எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து, "இல்லை, இல்லை; நான் இருளின் தளத்தில்தான் இருக்கிறேன். பவுல் புதிய ஏற்பாட்டில் சொல்வது தவறு," என்று நாம் நினைத்துவிட வேண்டாம். "தேவன் ஒருவரே உண்மையுள்ளவர் என்றும், எந்த மனிதனும் பொய்யன் என்றும் சொல்லக்கடவோம்" (ரோமர் *3:4*). அந்த எந்த மனிதனிலே நானும் நீங்களும் அடக்கம். அவர் நம்மை இடமாற்றம் செய்திருக்கிறார். நாம் கிறிஸ்துவில் உள்ளோம். தேவனுடைய அன்பின் குமாரனுடைய அரசில் உள்ளோம்.

நான் உங்களுடைய தேவைகளையெல்லாம் மனதில் வைக்காமல் இல்லை. தேவனுடைய மக்க ளுடைய இன்றைய நிலைமை எனக்குத் தெரியும். ஆனாலும், அந்த நிலைமையை நான் அடிக்கடி யோசிப்பது உண்டு.

நேற்று கடற்கரை ஸ்டேஷன் வழியாகப் போகும்போது 'ஜெபகோபுரம்' பார்த்தேன். "பிரார்த்தனைக் காக உள்ளே வாருங்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" என்று எழுதியிருந்ததைப் பார்த் தேன். "வெளியே போங்கள். உங்கள் சந்தோஷம் துக்கமாய் மாறும். நாங்கள் அந்தச் சமயத்திற்கு band-aid ஒட்டி விடுவோம் அல்லது ஒரு ஜெப steroid மாத்திரை ஒன்று அளிப்போம். அப்புறம் அந்த steroid effect குறைந்தவுடனே நீங்கள் நீங்களாகவே இருப்பீர்கள்" என்பதல்ல, அப்படியல்ல.

### கிறிஸ்துவில் வாழ்தல்

தேவன் நமக்காக ஏதோவொன்றைச் செய்வதற்குமுன் நம்மில் ஏதோவொன்றைச் செய்ய விரும்பு கிறார். அது மட்டுமே பரம தளத்திற்குப் போகக்கூடியது. நமக்காகச் செய்யக்கூடியது எதுவும் பரம தளத்திற்கு போகக்கூடியது அல்ல. கொலோசெயர் 2ஆம் அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் இப்படி எழுதுகிறார்: நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவ ருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவருக்குள் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொள் ளுங்கள் (வ. *6*).

*கிறிஸ்துவில் வாழ்வது* என்கிற ஒரு எண்ணம் புதிய ஏற்பாட்டில் உள்ளது. தேவனுடைய மக்களாகிய நாம் வாழ்கிற தளம் ***கிறிஸ்து ஒரு தளம். கிறிஸ்து ஒரு உலகம். கிறிஸ்து ஒரு மண்டலம். கிறிஸ்து ஒரு அமைப்புமுறை.*** கிறிஸ்து ஒரு நபர் என்று நமக்குத் தெரியும். *கிறிஸ்து ஒரு தளம். கிறிஸ்து ஒரு மண்டலம். கிறிஸ்து ஒரு உலகம். கிறிஸ்து ஒரு அமைப்புமுறை.* இதற்கெல்லாம் என்ன அர்த் தம்? இது உண்மை. இல்லாவிட்டால் கொலோசெயர் 2ஆம் அதிகாரத்திலே பவுல், "நீங்கள் கிறிஸ்து வில் நாட்டப்பட்டபடியே அவரில் வேர்கொண்டு அவரில் நடந்துகொள்ளுங்கள்; அவரில் நீங்கள் வாழுங்கள்," என்று எப்படிச் சொல்ல முடியும்?

சங்கீதம் *90*இல் மோசே சொல்வதுபோல, "ஆண்டவரே, தலைமுறை தலைமுறைக்கும் நீரே எங்கள் வாசஸ்தலமாயிருக்கிறீர்" (வ.*1*). முதலாவது, நாம் கிறிஸ்துவில் வாழ்கிறோம்.

லூசியன் என்ற ஒரு தேவனுடைய அடியான்; அவனைப் ரோமப் பேரரசில் கைது செய்து விசாரித் தார்களாம். “நீ யார்?” அவருடைய பதில்: நான் ஒரு கிறிஸ்தவன். “உன்னுடைய தொழில் என்ன?” அவருடைய பதில்: நான் ஒரு கிறிஸ்தவன். “நீ எந்த நாட்டைச் சேர்ந்தவன்?” மீண்டும் அவருடைய பதில்: நான் ஒரு கிறிஸ்தவன். விசாரித்துக் கேட்கிற ஆட்களிடம் கொஞ்சம் நைசாகப் பேசித் தப் பிக்க வேண்டாமா? இல்லையா? “நீ யார்? நான் கிறிஸ்தவன். உன் தொழில் என்ன? நான் கிறிஸ் தவன். உன் நாடு என்ன? நான் கிறிஸ்தவன்” அவர்களெல்லாம் திமிராகப் பேசுவதற்காகப் அப்படிப் பேசவில்லை.

“உண்மையாகவே உன்னுடைய தொழில் என்ன?” என்று கேட்டால் நம் பதில் என்ன? *“கிறிஸ்துவில் வாழ்வது; கிறிஸ்துவால் வாழ்வது; கிறிஸ்துவைக்கொண்டு வாழ்வது; கிறிஸ்துவை மற்றவர்களுக்குப் பரிமாறுவதைத்தவிர எனக்கு வேறு தொழில் இல்லை”.* அதற்கு அர்த்தம் நான் ஒரு கம்பெனியிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ வேலை செய்யவில்லை என்பதல்ல. இந்தப் பூமியின் தளத்திலே வேலை செய்பவர்களாகக் காணப்படுவோம். ஆனால், பரம தளத்தில் நாம் கிறிஸ்துவால் வாழ் கிறோம்; நம்மால் முடிந்த அளவுக்குக் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு வழங்குகிறோம்; கிறிஸ்துவை மற்றவர்களுக்கு காண்பிக்கிறோம். அதுதான் நாம் உண்மையாக செய்துகொண்டிருப்பது.

“உன்னுடைய நாடு என்ன?” என்று கேட்டால் உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன்தான் கணியண் பூங்குன்றனாரோடு சேர்ந்து “யாதும் ஊரே யாவரும் கேளீர்,” பாட முடியும். உண்மையிலே ஒரு கிறிஸ்தவனைத்தவிர வேறு எவனும் இதைச் சொல்ல முடியாது. நமக்கு இந்த முழு உலகமும் கிறிஸ்து. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய ஊரும், நம்முடைய நாடும் கிறிஸ்துதான். இது உங்களுக்கு அவ்வளவு ஆறுதலும், தேறுதலும் தருவதுபோல் தோன்றாமல் போகலாம். “எனக்கு இன்றைக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சனைக்கு நல்ல தீர்வு என்ன? அதை விட்டுவிட்டு நீங்கள் ‘கிறிஸ்துவில் வாழ்கிறீர்கள்’ என்று சொல்வதால் எனக்கு என்ன பயன்?” என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரை கிறிஸ்துவில் வாழ்வதுதான் இதற்குத் தீர்வு.

## கிறிஸ்துவோடு வாழ்தல்

இரண்டாவது, கிறிஸ்துவோடு வாழ்வதைப்பற்றி வேதம் சொல்லுகிறது. ரோமர் 6ஆம் அதிகாரம் சொல்லுகிறது: “நாம் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டிருப்போமானால் உயிர்த் தெழுதலிலும் நாம் அவரோடு இணைக்கப்பட்டிருப்போம்” (வ. 5). நாம் கிறிஸ்துவோடு இணைக்கப் பட்டிருக்கிறோம். இது புதிய ஏற்பாட்டினுடைய ஒரு மாபெரும் உண்மை.

நாம் இன்று பாடின இரண்டு பாடல்கள். “நீர் திராட்சைச் செடியாக இருக்கிறீர்; நாங்கள் கொடி களாக இருக்கிறோம் அல்லது கிறிஸ்துவே என்னுடைய திராட்சை செடி”.

“நான் பரதேசியாய்ச் சஞ்சரிக்கும் இந்தத் தேசத்திலே அல்லது ஊரிலே, பூமியிலே, உம்முடைய பிர மாணங்களே என்னுடைய கீதங்களாயின”. அவர் நம்முடைய சொந்தமாக இருக்கிறார். நாம் கிறிஸ்து வோடு சேர்ந்து வாழ்கிறோம். இது ரொம்ப அற்புதமான வாழ்க்கை. அவருக்கும் துன்பமுண்டு. நான் படுகிற துன்பங்களை அவரும் படுகிறார் என்று எபிரெயர் 4ஆம் அதிகாரத்திலே வாசிக்கிறோம். “அவர் நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கமுடியாத பிரதான ஆசாரியராயிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமற்றவாயிருக்கிறார். அவர் நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கிறார்”.

நான் கிரேக்க பண்டிதன் அல்ல. ஆனால், இந்த மாதிரி சில முக்கியமான வார்த்தைகளை நான் தெரிந்துகொள்வது உண்டு. “sympathios” என்றால் நாம் ஒரு உணர்ச்சியை அடையும்போது அதே உணர்ச்சியை அவர் அடைகிறவராயிருக்கிறார். நாம் அந்த நெருக்கத்தினால் கண்ணீர் விடுகிற உணர்ச்சியை பெறும்போது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் அதே உணர்ச்சியில் பங்கு பெறு கிறார். நாம் சொல்லுகிறோம். அவருடைய உணர்ச்சியில் நாம் பங்குபெறுவது மட்டுமல்ல. நம் முடைய உணர்ச்சிகளில் அவர் பங்கு பெறுகிறார். நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கிற பிரதான ஆசாரியர் என்பதினுடைய பொருள் அதுதான். One who cofeels with us. அப்படி ஒரு ஆங் கில வார்த்தை கிடையாது. அதனால் He can sympathize with us என்று மொழிபெயர்த்திருக்கிறோம். அதாவது sloppy English மொழிபெயர்க்கலாம் என்றால் when we feel he cofeels. இப்படிப்பட்ட வாழ்க்கை அற்புதமான வாழ்க்கை. கிறிஸ்துவோடு வாழ்கிற வாழ்க்கை. கிறிஸ்துவில் வாழ்கிற வாழ்க்கைக்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவோடு நாம் வாழ்கிற வாழ்க்கைக்காக

நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை. இந்த எண்ணத்தை மட்டும் நான் பகிர்ந்துகொள்கிறேன்.

**கிறிஸ்துவால் வாழ்தல்**

மூன்றாவது, கிறிஸ்துவால் வாழ்கிற வாழ்க்கை. யோவான் 6ஆம் அதிகாரத்திலே அதைப்பற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார். "நான் பிதாவினால் வாழ்வதுபோல என் மாம்சத்தைப் புசிக்கிறவன் என்னாலே வாழ்வான் அல்லது என்னை விசுவாசிக்கிறவன் என்னாலே வாழ்வான்". கிறிஸ்துவைக்கொண்டு இந்த பூமியிலே நாம் வாழ முடியும். "உங்களுடைய உபதேசம் என்ன?" என்று யாராவது நம்மிடம் கேட்டால் நான் ஒரு வாக்கியத்தில், "கிறிஸ்துவைக்கொண்டு இந்தப் பூமி யிலே வாழ முடியும் என்பதை நிரூபிப்பதற்காக தேவன் நம்மை அழைத்திருக்கிறார். அதை நான் என்னுடைய வாழ்க்கையிலே பரீட்சித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் அல்லது அனுபவித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்," என்று பதில் சொல்வேன்.

கிறிஸ்துவைக்கொண்டு இந்தப் பூமியிலே வாழ முடியுமா? நம்முடைய வாழ்க்கையினுடைய பாடுகள், துன்பங்கள், வருத்தங்கள், நெருக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஒரேவொரு பொருள்தான் உண்டு என்று வேதம் சொல்லுகிறது. அந்தப் பாடுகளிலும், வேதனைகளிலும், வருத்தங்களிலும், நெருக்கங்களிலும் கிறிஸ்துவால் வாழ முடியும். இதற்கு நாம் பொய்ச்சாட்சிகளல்ல, மெய்யான சாட்சிகளாக இருக்கிறோம்.

உபாகமம் 8ஆம் அதிகாரம் (4 ஆம் வசனம்) நாம் அடிக்கடி வாசித்திருக்கிறோம். "அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி"...இன்னும் அந்தப் பட்டியலிலே நீங்கள் நூறு சேர்த் துக்கொள்ளலாம். இது ஒரு தொடக்கம். "அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனிதன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ் வொரு வார்த்தையினாலும் வாழ்வான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக் களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்".

இரண்டு பகுதிகளை உங்களுக்கு வாசிக்க விரும்புகிறேன். 2 கொரிந்தியர் 4ஆம் அதிகாரத்திலே (8, 9 ஆம் வசனங்கள்). "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்க மடைந்தும் மனமுறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப் பட்டும் மடிந்துபோகிறதில்லை". இதை நீங்கள் யோசித்துப்பார்க்க வேண்டும். ஒரு முட்டையை எப்பக்கத்திலும் நெருக்கினால் முட்டை உடைந்துபோகும். ஆனால், இங்கு பவுல், "எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் நாங்கள் உடைந்துபோகிறதில்லை," என்று சொல்லுகிறார். மனிதன் ஒரு முட்டை யைவிட பலவீனமானவன். ஏனென்றால் அதற்கு முந்தின வசனத்தில் "நாங்கள் மண்பாண்டங்கள்" என்று அவர் சொல்லுகிறார்.

ஒரு நல்ல பாட்டு உண்டு.

*உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்*
*எண்பது கோடி நினைந்து எண்ணுவன-கண்புதைந்த*
*மாந்தர் குடி வாழ்க்கை மண்ணில் கலம்போலச்*
*சாந்துனையும் சஞ்சலமேதான்.*

மனிதனுடைய வாழ்க்கை ஒரு மட்பாண்டம் போன்ற வாழ்க்கை. 2 கொரிந்தியர் 9இலே அப்படி ஒரு வசனம் இருப்பதினால் எனக்கு ஞாபகம் வந்தது. ஓரளவுக்குப் புறவினத்துத் தீர்க்கதரிசியாகிய பிலே யாம்போல அந்தக் கவிஞன் மனிதனுடைய வாழ்க்கை மண்ணின் கலம்போல சாகும்வரை சஞ்சலமே என்ற கூறுகிறான்.

இந்த இயற்கையான விதியின்படி, இந்தப் பூமிக்குரிய தளத்திலே இயற்கையான விதியையும் உல கத்தினுடைய விதியையும் பார்த்தால் நம்முடைய கதை இந்நேரம் முடிந்திருக்கும். நாம் எப்பக்கத் திலும் நெருக்கப்படுகிறோம்; ஆனால், நாம் இன்னும் உடைந்துபோவதில்லை; நாம் இன்னும் நொறுங்கிப்போகவில்லை; நாம் நசுங்கிபோகவில்லை. நான்காவது வாக்கியம் சொல்லுகிறார்: நாங்கள் கீழே விழுந்தும்...ஏறக்குறைய குத்துச்சண்டையில் அடிபட்டுக் கீழே கிடக்கையில், பத்து... ஒன்பது...எட்டு...ஒன்று...என்று எண்ணி "சரி இவன் கதை முடிந்தது" என்று நினைக்கும்போது அவ னுடைய கதை இன்னும் முடியவில்லை.

அதே 2 கொரிந்தியர் 6ஆம் அதிகாரத்திலே இதைவிட நீளமான ஒரு பட்டியலை அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். அந்த ஒரு பகுதியை மட்டும் வாசிக்கலாம். அது ரொம்ப ஆச்சரியமானது. ரொம்ப முரண்பாடுகள் நிறைந்த ஒரு பகுதி. "கனத்திலும் கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்கள் என்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாயும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும்..." கொஞ்சம் நிறுத்துங்கள். இதற்கு என்ன பொருள்? இந்தப் பூமிக்குரிய தளத்தின்படி பார்க்கும்போது சாகிறவர்கள். ஆனால், நாம் இன்னும் உயிரோடிருக்கிறோம். "..தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும்..." நீங்கள் இந்தப் பகுதியை நன்றாய் வாசித்துப்பாருங்கள்.

"துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும்". இயேசு கிறிஸ்து, "துக்கம் நிறைந்தவரும் பாடு அநுபவித்தவருமாய் இருந்தார்" (ஏசாயா 53:3) என்று எழுதப்பட்டிருக்கிறது. அதற்காக இயேசுகிறிஸ்து எப்போதும் நீண்ட முகத்தோடு இருந்தார் என்று யாரும் சொல்ல முடியாது. நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்போல மகிழ்ச்சியான, நம்பிக்கையும் வெற்றியும் நிறைந்த, ஒரு மனிதன் இந்தப் பூமியிலே கால் பதிப்பதில்லை. ஆனாலும் அவரைப்பற்றி "துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாய் இருந்தார்," என்று வேதம் சொல்லுகிறது.

"..தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும்..." இது எப்படி? இன்று என்ன நடக்கிறது? தரித்திரராக இருந்தால், "நாங்கள் தரித்திரர். எனவே எங்களுக்குப் பணம் அனுப்பி எங்களை ஐசுவரியவான்களாக்குங்கள்" என்று டி.வியிலே போட்டுக்காட்டுவார்கள், இணைய தளத்தில் போட்டு காணிக்கை அனுப்பச்சொல்லுகிறார்கள். அப்படியல்ல. "நாம் தரித்திரர் என்னப்பட்டாலும் நமக்குப் பணம் தேவை என்று ஒருவர் நினைக்கும்வண்ணம் ஒருநாளும் நாம் உடுத்தவோ நடக்கவோ கூடாது". உடனே "இது கடினமானதாய் இருக்கிறதே!" என்று பயந்துவிட வேண்டாம். எப்படித்தான் மற்றவர்கள் நம் தேவையை அறிந்துகொள்வார்கள்? பவுல் ரொம்ப வறுமையில் இருந்தார். பிலிப்பியர் 4ஆம் அதிகாரம் நம் மனதைக் குத்திக் கிழிக்கக்கூடிய ஒரு பகுதி. எவ்வளவோ தேவனுடைய மக்களுக்கு சேவை செய்த ஒரு மனிதன். ஆனால், அவனைப்பற்றி எண்ணுவார் யாரும் இல்லை. அதைப்பற்றி அவனுக்கு வருத்தமும் இல்லை. "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை. நீங்கள் என்னை நினைவுகூர்ந்து ஒரு உதவியை அனுப்பிவைத்தீர்களே இதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் எதைப்பற்றி என்னுடைய மகிழ்ச்சி என்றால் ஓ! உங்களுடைய மனம் மலர்ந்ததைப்பற்றித்தான் என்னுடைய மகிழ்ச்சியேதவிர இது வந்தாலும் வராவிட்டாலும் எனக்கு எந்தக் குறைவோ நிறைவோ இல்லை".

"...துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்போதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும் ஒன்றுமில்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்". தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கும் பாருங்கள். "ஒன்றுமில்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்கள்," என்று பவுல் பொய் சொல்லுகிறாரா?

நான் ஒரு தேவனுடைய மனிதனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். செருப்பு இல்லாத ஒரு சகோதரனிடத்தில் ஒருவர் வந்து, "என்ன ஐயா செருப்பு போடவில்லை?" என்று கேட்கிறார். அவர், "இருக்கிறது பிரதர்," என்று பதில் சொல்ல, "எங்கே இருக்கிறது?" என்று இவர் மீண்டும் கேட்ட. அவர் மறுபடியும், "இருக்கிறது பிரதர்," என்று பதில் சொல்ல, அவரும் விடாப்பிடியாக, "எங்கே இருக்கிறது?" என்ற கேள்வியைக் கேட்க, இவர், "மண்ணுக்குள்ளே புதைந்திருக்கிறது" என்று பதில் சொன்னார். இது உண்மையில் நடந்தது. "செருப்புப் போடவில்லையா?" "மண்ணுக்குக்கீழே புதைந்திருக்கிறது".

"ஒன்றுமில்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்கள்". இதை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்? பூமியின் தளத்திலே நாம் ஒன்றுமில்லாதவர்கள். இந்தப் பூமி நம்மைப் பார்க்கும்போது, "இவர்கள் ஒன்றுமில்லாதவர்கள்," என்று தீர்மானிக்கும். நாமும் வெறுமனே பூமிக்குரிய தளத்தில் இருப்போமென்றால் நாமும் நம்மைப்பற்றி, "ஒன்றுமில்லாதவர்கள்," என்றுதான் பதில் சொல்வோம். எங்கு அவர்கள் சகலத்தையும் உடையவர்கள்? பரம தளத்திலே அவர்கள் சகலத்தையும் உடையவர்கள்.

தேவனுடைய அழைப்பு நாம் இந்தப் பூமியின் தளத்திலே ஒன்றுமில்லாதவர்கள்போல் காட்சியளித்தாலும், இந்தப் பூமியின் தளத்திலே நாம் வாழ வேண்டிய அவசியம் இல்லை. பரம தளத்திலே

நாம் சகலத்தையும் உடையவர்கள். "இந்தப் பரம தளத்தில் நீங்கள் சகலத்தையும் உடையவர் களா?" என்று நீங்கள் கேட்கலாம். உண்மையிலேயே வாழ முடியுமா? இது ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. எடுத்துக்காட்டாக வேலையில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற் றல் வேண்டுமானால் இந்த உலகத்து மக்கள் செய்வதுபோல ஒரு அமைச்சரைப் பார்த்து செய்ய வேண்டிய காரியத்தைச் செய்தால் காரியம் முடிந்துவிடும். இது கறிக்கு உதவும். இல்லையா?

உங்களைக் கைதுசெய்து சிலுவையிலே அறைய வேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள். உடனே யோவானைப் பார்த்து, "உங்கள் அப்பாவுக்குப் பிரதான ஆசாரின் வீட்டிலே தொடர்பு இருக்கிற தில்லையா? நீ பிரதான ஆசாரியனைப் பாரு. பிரதான ஆசாரியனிடத்தில் ஒரு வார்த்தை சொல்லு; அப்படியே ஏரோதைப் பார்க்க சொல்லு; அப்படியே ஏரோதுகிட்ட ஒரு வார்த்தை சொல்லி ஆளுநர் பிலாத்தைப் பார்க்கச் சொல்லு" என்று இயேசு சொல்லவில்லை. அதுபோல, "சரி, இனிமேல் இந்தத் திசைகளில் உம் வேலை நடக்காது. அப்படியே ஓரமாகப் போய்விடுவோம். கிரேக்கரிடத்தில் போய் விடுவோம். கிரேக்கர் உம்மைப் பார்க்க விரும்புகிறோம் என்று சொன்னார்கள் இல்லையா? இந்தத் தேசம் இல்லை என்றால் கிரேக்க தேசத்திற்குப் போய்விடுவோம். நாம் ஒரு சமரசத்திற்கு வந்து விடுவோம்," என்று அவர் பூமிக்குரிய தளத்தில் செயல்படவில்லை. "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால் 72,000த்துக்கும் அதிகமான தேவ தூதர்களை என்னிடத்தில் அனுப்ப மாட்டாரா?" என்று கேட்டார். எலிசா பழைய ஏற்பாட்டில் ஜெபித்ததுபோல, "பிதாவே, இவர் களுடைய கண்களைத் திறந்தருளும். இந்த பேதுரு அந்த 72,000 தூதர்களைப் பார்க்கட்டும்," என் றெல்லாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஜெபம் பண்ணவே இல்லை. எலிசா ஜெபம்பண்ணி, "ஆண்டவரே, என்னுடைய வேலைக்காரனுடைய கண்களைத் திறந்தருளும்," என்று சொல்லி கேயாசி அவர்களைச்சுற்றி அக்கினிமயமான குதிரைகளும் போர்வீரர்களும் நிற்கிறார்கள் என்று பார்த்தான். ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யாருடைய கண்களையும் திறக்கவில்லை. அவர் பரம தளத்தில் வாழ்ந்தார்.

எந்தக் கணத்திலும் நாம் பிதாவினுடைய பாதுகாப்பின்கீழ் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எந்தக் கணத்திலும் நாம் கிறிஸ்துவால் வாழ முடியும். "ஒன்றுமில்லாதவர்கள், தரித்திரர்கள், இவர்களுக்கு இந்தப் பூமியிலே வல்லமை இல்லை, சக்தி இல்லை அல்லது தொடர்புகள் இல்லை," என்றாலும் பிலிப்பியர் 4ஆம் அதிகாரம் (13, 19 ஆம் வசனம்): "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு". "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்". "என் தேவன் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார்". மகிமையின் ஐசுவரியங்கள் என்று அவர் சொல்வது பரம தளத்தில் கிறிஸ்து வுக்குள் நம் எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடியது. மற்றவர்களை இப்படி ஆசீர்வதித்த பவுல், "என் தேவன் உங்கள் குறைவுகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலுள்ள தம் செல்வங்களைக்கொண்டு நிறைவாக்குவார்," என்று சொன்ன பவுல் "எனக்கு ஒவ்வொரு நாளும் சாப்பாடு கிடைத்தது," என்று சொல்லவில்லை. "நான் பட்டினியாயிருக்கவும் பரிபூரணமடையவும் கர்த்தரால் போதிக்கப்பட்டேன்," என்று சொன்னார். நாம் பட்டினி கிடக்க வேண்டும் என்று நாம் அஞ்சிவிட வேண்டாம். ஆனால், பட்டினி கிடப்பதால் நம்முடைய வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்துவிடாது.

எனவே, அருமையான பரிசுத்தவான்களே! தேவனுடைய மக்களே! நான் சாட்சி சொல்வதற்கு நிறைய இருக்கிறது. பலரும் பாடுகளுள்ள வாழ்க்கையின் வழியாய் போய்க்கொண்டிருக்கிறார்கள். 2 கொரிந்தியர் 6ஆம் அதிகாரத்தை நாம் நினைவுகூறுவோம். நாம் நெருக்கப்படலாம், ஒன்றுமில்லாத வர்கள்போல் தோற்றமளிக்கலாம், தரித்திரர்போல் தோற்றமளிக்கலாம், எத்தர்போல் தோற்றமளிக்க லாம், ஆனால் உண்மையிலேயே நாம் இந்தப் பூமி பார்க்கிறதுபோன்ற மக்கள் அல்ல. எத்தர் அல்ல. நாம் நிஜஸ்தர்; நாம் கனவீனர் அல்ல, நாம் கனத்துக்குரியவர்கள். தேவனுடைய பார்வை யிலே நாம் ஒன்றுமில்லாதவர்கள் அல்ல. எல்லவாவற்றையும் உடையவர்கள். நாம் தரித்திரர் அல்ல. பலரை நம்மால் ஐசுவரியவான்களாக்க முடியும். நாம் எப்படிப்பட்ட மக்கள் என்பதை மறந்துபோகா திருப்போமாக. இன்று என்னுடைய நிலைமை "ஒன்றுமில்லாதவனாக இருக்கிறேன். தரித்திரனாக இருக்கிறேன். நெருக்கப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நாளைக்கு நான் உடைந்து போவேன் என்று அஞ்சத்தக்க நிலையிலே என்னுடைய நிலை இருக்கிறது," என்று நினைக்கலாம்.

## நம் பரம அழைப்பு

**நாம் கிறிஸ்துவில் வாழுமாறு அழைக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவோடு வாழுமாறு அழைக்கப் பட்டவர்கள். கிறிஸ்துவைகொண்டு வாழுமாறு அழைக்கப்பட்டவர்கள்.** நம்முடைய வாழ்வின் எல்லா நிலைகளிலும், சூழ்நிலைகளிலும் இப்படி கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு, கிறிஸ்துவால் வாழும்போது சாதாரண இந்தப் பூமிக்குரிய வாழ்க்கையை நாம் பரம தளத்திற்குக் கடத்திகொண்டுபோய் விடுகிறோம். தேவனுக்கு மதிப்பும் அருமையுமான ஒன்றை நம் வாழ்க்கையில் நாம் அப்படி வாழும் போது உருவாக்குகிறோம். கிறிஸ்துவால் வாழும்போது, கிறிஸ்துவோடு வாழும்போது, கிறிஸ்துவில் வாழும்போது நம்முடைய வாழ்க்கையின்மூலமாக நாம், எப்படி ஒரு தோட்டத்திலே காய்கறிகளை, பழங்களை உற்பத்திசெய்வதுபோல, நம்முடைய வாழ்க்கையிலே கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை உற்பத்திசெய்கிறோம். இந்தக் காலகட்டத்திலே நாம் எந்த நாட்டிலே, எந்த ஊரிலே வாழ்ந்தாலும் சரி, இது நம்முடைய அழைப்பாக இருக்கிறது. இது மனிதனுடைய கண்களுக்கு மிகவும் ஆச்சரிய மாயிருக்கிறது. "வீடுகட்டுகிறவர்களால் ஆகாதென்று தள்ளப்பட்ட கல்லே வீட்டிற்கு மூலைக்கல்லா யிற்று இது மனிதனுடைய கண்களுக்கு ஆச்சரியமாயிற்று," என்று ஒரு வசனம் இருக்கிறது.

அப்போஸ்தலர் 28ஆம் அதிகாரத்திலே ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. பாம்பு சூடு உறைத்து பவுலின் கையைக் கவ்விக்கொண்டது. அவன் உடல் வீங்கி இன்னும் சிறிது நேரத்தில் செத்துப்போவான் என்று அந்தத் தீவின் மக்கள் ரொம்ப ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவன் அந்த பாம்பை உதறிப்போட்டு ஒன்றும் நடக்காதவன்போல் இருக்கிறான். தூங்கும்போது "என்னமோ இன்றைக்குப் பிழைத்துவிட்டோம். நாளைக்கு என்ன ஆகப்போகிறதோ" என்றோ அல்லது நாளைக் குத் தூங்கப்போகும்போது, "இன்றைக்கும் எப்படியோ பிழைத்துவிட்டோம். ஆனால், எப்படியும் இன் றைக்கு நடந்தபோன்ற ஒரு விபத்தில் நாமும் போய்ச் சேர்ந்துவிடுவோம்," என்றெல்லாம் தேவ னுடைய மக்கள் பயந்து வாழ வேண்டிய அவசியமில்லை.

இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் இப்படிப்பட்ட எல்லாச் சூழ்நிலைகளிலும் கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை வெற்றிபெறச் செய்வார். ரோமர் 8ஆம் அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொல் கிறார். "மரணமானாலும் ஜீவனானாலும், தேவதூதர்களானாலும் அதிகாரங்களானாலும், வல்லமைக ளானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும், உயர்வானாலும் தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது என்று நிச்சயித்திருக்கிறேன். இவை எல்லாவற்றிலும் நம்மில் அன்புகூருகிறவராலே நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமே". கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.